**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.10/2026 ல்**

**அசல் வழக்கு எண்.89/2016**

1) R.மணிகண்டன்,
த/பெ.K.ராஜு,
எண்.7, ஸ்ரீ வைஷ்ணவி நகர்,
RMS காலணி, கருமண்டபம்,
திருச்சி – 01.

2) பரிமளம் (**இறந்துவிட்டார்**),
த/பெ.K.ராஜு, ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர் /

1) T.R.பழனிவேல் (**இறந்துவிட்டார்)**

2) P.சுமதி,
க/பெ.பழனிவேல்,
எண்.293/6, M.G. ரோடு,
நியூ ஃபோர்லண்ட்ஸ்,
சேலம்–16.

3) P. பிரவீன்,
த/பெ. பழனிவேல்,
எண்.293/6, M.G. ரோடு,
நியூ ஃபோர்லண்ட்ஸ்,
சேலம்–16. ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது, கடந்த 11.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.கோபிநாத் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.P.கனகராஜா அவர்களும் முன்னிலையாகியும், மனுவை நடத்த, மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**உத்தரவு**

1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வகுமுறை 12 விதி 8 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை எதிர்மனுதாரர்கள் வசம் உள்ளதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக்கூறி, 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் இறந்துபோன தாயார் என்றும், இறந்துபோன 1ம் வாதி இந்த மனுதாரருக்கெதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கேட்டு, அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தற்போது இறந்துபோன 1ம் வாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளை அசல் வழக்கின் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு நடைபெறுவதாகவும், அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில், வாதி தரப்பு 2ம் சாட்சியான 3ம் வாதி பிரவீன்குமார் என்பவரை 06.03.2026ம் தேதி குறுக்கு

விசாரணை செய்தபோது, அவரது தந்தை பழனிவேலு அவர்களின் வருமானவரி கணக்கு விவரங்களை தாக்க செய்ய இயலும் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், பழனிவேல் அவர்கள் 2010 ல் பணி ஓய்வு பெற்றபோது கிடைக்கப் பெற்ற தொகையில்தான் ரூ.15,00,000/−ஐ பிரதிவாதிக்கு கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், ஆகவே, இது சம்பந்தமாக இறந்துபோன பழனிவேலு என்பவரின் வருமானவரி கணக்கு வழக்கு ஆவணங்களை தாக்கல் செய்யவும், மேலும், அவரது வங்கி கணக்கு விவரத்தின் 2010, 2011, 2012 மூன்று வருட விவரங்களை தாக்கல் செய்யவும், அந்த ஆவணங்களின் நகல் 1 ம் பிரதிவாதிக்கு வழங்க வாதிகளுக்கு உத்தரவிட வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும்,அதை எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், இந்த வழக்கில் மனுதாருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கினை நிருபணம் செய்ய மிக முக்கியமான ஆவணங்கள் என்றும், மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு இழப்பு ஏற்படும் என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

3) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக்கூறி, மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்தும் பொய்யானவை என்றும், அசல் வழக்கில் வா.சா1−ன் தொடர் குறுக்கு விசாரணையை தாமத்தப்படுத்தவே இந்த மனுவை தாக்கல்

செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் எதிர்மனுதாரரின் தற்போது கைவசம் இல்லை என்றும், அசல் வழக்கை தீர்மானிக்க இந்த ஆவணங்கள் அவசியமில்லை என்றும், இந்த வழக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததின் அடிப்படையில் தொடரப்பட்டது என்றும், எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது, இறந்துபோன 1ம் வாதி, பிரதிவாதிகளுக்கெதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த மனுவானது 1) இறந்துபோன பழனிவேலு அவர்களின் வருமானவரி கணக்கு வழக்கு விவர ஆவணங்கள், 2) கடந்த 2010, 2011, 2012 ஆகிய மூன்று வருட வங்கி கணக்கு புத்தக விவரங்கள் ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் / வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. வாதி தரப்பு சாட்சியான வா.சா.2 ஐ 06.03.2026 ம் தேதி மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, மேற்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலும் என்று ஒப்புக்கொண்டுள்ளதாகவும்

கூறப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் தற்போது கைவசம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

6) வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட 3ம் வாதி பிரவீன்குமார் தனது குறுக்கு விசாரணையில், தன் தந்தை அரசு ஊழியர் என்பதால் அவர் வருமானவரி கணக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் என்றும், அந்த வருமான வரி கணக்கை தன்னால் தாக்கல் செய்யமுடியுமென்றும், என் அப்பா 2010ல் பணி ஓய்வு பெற்றார் என்றும், அந்த தொகையைக் கொண்டு 15,00,000/-ஐ ரொக்கமாகக் கொடுத்தார் என்றும், அந்தத் தொகை வங்கிக் கணக்கிலிருந்து எடுத்துத்தரப்பட்டதா? என்றால் அது தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். விசாரணை நீதிமன்றத்தில், இருதரப்பினருக்கும் அவர்களது வழக்கை நிரூபிக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது,

7) இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி, இறந்துபோன பழனிவேலு அவர்களின் வருமானவரி கணக்கு வழக்கு விவர ஆவணங்கள் மற்றும் அவரது 2010, 2011, 2012 ஆகிய மூன்று வருட வங்கி கணக்கு புத்தக விவரங்கள் ஆகியவற்றை, வாதிகள் தாக்கல் செய்ய உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததென முடிவு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் எவ்விதம் அசல் வழக்கை தீர்மானிக்க உதவும் என்பது தொடர்பாக, அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும்.

8 ) **முடிவாக,**

இந்த மனு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

மனுவில் கோரப்பட்டுள்ள ஆவணங்களை, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இரண்டு வார காலத்திற்குள், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் எவ்விதம் அசல் வழக்கை தீர்மானிக்க உதவும் என்பது தொடர்பாக?, அசல் வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும். மனு செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.29 14:09:19 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

SARAVANAN B

Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.29 14:09:26 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**